2018 ஜூலை 3]

நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

253—

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

***3090—திரு. தா.மோ. அன்பரசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதியிலுள்ள தில்லை கங்கா நகர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வினாவில், காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் தொகுதியிலுள்ள தில்லை கங்கா நகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது நிலமங்கை நகர் என்று நினைக்கிறேன். அங்குள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைச் சீரமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-2001 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில், ஆலந்தூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆதம்பாக்கம் நிலமங்கை நகரில் 24 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட கழிவுநீரகற்றும் நிலையம் அமைக்கப்பட்டது. தற்போது, ஆலந்தூர், ஆதம்பாக்கம், நங்கநல்லூர், பழவந்தாங்கல் ஆகிய பகுதிகளில் மிக அதிக அளவில் புதிய குடியிருப்புகள் உருவாகியுள்ளன. இந்தக் கழிவுநீரகற்றும் நிலையத்திற்கு போதிய திறன் சக்தி இல்லாததால், மழைக் காலங்களில் இந்த நிலையத்திலிருந்து கழிவுநீர் வெளியேறாமல், ஆதம்பாக்கம் பகுதியில் தில்லை கங்கா நகர், நிலமங்கை நகர்,*

[2018 ஜூலை 3

லெட்சுமி நகர், பாலாஜி நகர், பாரத் நகர், புவனேஸ்வரி நகர் ஆகிய தாழ்வான பகுதிகளிலுள்ள குடியிருப்புகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் கழிவுநீர் தேங்குவதால், சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு, ஆண்டுதோறும் 2 மாதங்களுக்கும் மேலாக அந்தப் பகுதியில் மக்கள் வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையைப் போக்கிட, இதே திறன் கொண்ட மேலும் ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அதே பகுதியில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரவிருக்கும் மழைக் காலத்திற்குள்ளாக சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர், ஆதம்பாக்கம், நங்கநல்லூர், பழவந்தாங்கல் மற்றும் மீனம்பாக்கம் பகுதிகளிலுள்ள 1,63,000 மக்கள் பயன்பெறும் வகையில் 1,023 சாலைகளில் கழிவுநீர் கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பகுதிகளிலிருந்து வரும் கழிவுநீர், 24 மில்லியன் லிட்டர் உந்து திறன்கொண்ட நிலமங்கை நகர் கழிவுநீர் உந்து நிலையத்தில் பெறப்பட்டு, பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. அப்பகுதிகளில் வேகமாகப் பெருகிவரும் மக்கள்தொகை, வணிக வளாகங்கள் மற்றும் பருவகாலத்தில் வரும் கூடுதல் நீரின் அளவைக் கருத்தில்கொண்டு, தற்போது இயங்கிவரும் நிலமங்கை நகர் கழிவுநீரகற்றும் நிலையத்தின் உட்பகுதியில் 180 சதுர மீட்டர் பரப்பளவுள்ள காலியிடத்தில் கூடுதலாக நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் உந்து திறன் கொண்ட கழிவுநீரகற்றும் நிலையம் அமைக்க 26 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்தக் கூடுதல் கழிவுநீரகற்றும் நிலையம் அமைக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, விரைவில் நிதி பெற்று பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 ஜூலை 3]

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் தொடங்கியபோது உள்ள மக்கள்தொகைக்கு ஏற்றவாறு 24 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட கழிவு நீரகற்றும் நிலையம் அமைக்கப்பட்டது. தற்போது கழிவு நீரகற்றும் நிலையத்தில் தினசரி 20 மில்லியன் லிட்டர் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. ஆனால், மழைக் காலங்களில் தினசரி 50 மில்லியன் லிட்டர், அதாவது இரண்டு மடங்கு அதிகமாக கழிவுநீர் இந்நிலையத்திற்கு வருவதால் கூடுதல் கழிவுநீரை வெளியேற்ற முடியாமல் இக்குடியிருப்புப் பகுதிகளில் நீர் தேங்கி ஒவ்வோர் ஆண்டும் மிகப் பெரிய அளவிலே மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதல் கழிவுநீர் நிலையத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதோடுமட்டுமல்லாமல், கடந்த 2009 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் ஆலந்தூர் பகுதிக்கு ரூபாய் 61 கோடி செலவிலே கொண்டு வரப்பட்ட மெட்ரோ குடிநீர் வழங்கும் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படாததால், ஆலந்தூர் பகுதியிலே பல இடங்களிலே மக்கள் குடிநீர் கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். இதுகுறித்து நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் வலியுறுத்தியபொழுது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலந்தூரில் உள்ள 82 தெருக்களில் குடிநீர்க் குழாய்கள் பொருத்துவதற்காக 13.71 கோடி ரூபாய் மதிப்பிலே திட்டம் தயாரிக்கப்பட்டு, பணிகள் விரைவிலே தொடங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அந்தத் திட்டத்தையும் ஆலந்தூர் பகுதியிலே வேகமாகச் செயல்படுத்தி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் பகுதியிலே கழிவுநீரகற்றும் நிலையம் மற்றும் குடிநீர்த் திட்டப் பணிகள் துறை அதிகாரிகளைக் கொண்டு வேகமாக முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் புதுமை பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், எந்த நிலையில் இருக்கின்றன என்றும், என்றைக்கு பணிகள் முடித்து செயல்படுத்தப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியிலே added area-க்கு இதற்கு முன்னால் மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபோது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன. இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. இராஜன் செல்லப்பா அவர்களும் இதுகுறித்துக் கேட்டிருக்கிறார்கள். இதற்கு கிட்டத்தட்ட 750 கோடி ரூபாய் அளவிற்கு நிதி தேவைப்படுகிறது. ஒவ்வொரு பகுதியாக எடுத்து செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. Added area உங்களுடைய தொகுதியிலும் இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பகுதி, பகுதியாக எடுத்து கூடிய விரைவில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட பாப்பாக்குடி, கீழப்பாவூர், கடையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு எங்கள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அப்போது துணை முதல்வராக இருந்தபோது அரசாணை பிறப்பிக்கப்பட்டு, 46.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்தத் திட்டத்தின் வாயிலாக தற்போது 163 கிராமங்கள் பயனடைய இருக்கின்றன. இத்திட்டத்திற்கு 2013 ஆம் ஆண்டு டெண்டர் விடப்பட்டது. கடந்த இரண்டு வருடங்களாக இதுகுறித்து நான் எத்தனை முறை கடிதம் எழுதியிருக்கிறேன் என்பது எனக்கே தெரியவில்லை.* Sri Ram Agency *என்ற ஒரு* Agency *இந்தப் பணியை எடுத்திருக்கிறார்கள். இதில் பல குளறுபடிகள் இருக்கின்றன என்று அதிகாரிகள் பலர் சொல்லியிருக்கிறார்கள். மூன்று மாதங்களில் திறப்போம், மூன்று மாதங்களில் திறப்போம் என்று சொல்லி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. இந்தத் திட்டம் எப்போது முடிவடையும்? எப்போது மக்களின் பயன்பாட்டிற்கு வரும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால், வரும் ஆகஸ்ட் மாதம் 30 ஆம் தேதிக்குள் பணிகள் முடிவடையும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலும் பணிகள் மிக, மிக மெதுவாகத்தான் நடைபெறுகின்றன. தயவு செய்து இந்தத் திட்டத்தில் சிறப்புக் கவனம் எடுத்து, வெகு விரைவில் இந்தத் திட்டத்தை முடிக்கும்படி மிகுந்த பணிவன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். மூலக் கேள்வி சுத்திகரிப்பு நிலையத்தைப் பற்றியது. இருந்தாலும்கூட, அவர்களுடைய தொகுதி மக்களின் மேலுள்ள அக்கறையின்பேரில் இந்த வினாவைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் கேட்கும்போது இதுகுறித்து பதில் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு)*

[2018 ஜூலை 3

இல்லை, நீங்களும் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். திடீரென்று ஒரு கேள்வி கேட்டால் அதற்கான விவரங்கள் இருந்தால்தான் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்றுதான் சொல்கிறேன். கண்டிப்பாக இதுகுறித்து துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். அவருடைய தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள். 2013 ஆம் ஆண்டில்தான் டெண்டர் விடப்பட்டிருக்கிறது. உங்களுடைய ஆட்சிக் காலத்தில் நீங்கள் நிதி ஒதுக்கீடு செய்து, ஏன் டெண்டர் விடாமல் போனீர்கள்? 2013 ஆம் ஆண்டில்தான் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. ஆகவே, துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு அந்தத் திட்டத்தை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி நகராட்சிப் பகுதிகளிலிருந்து தினந்தோறும் எடுக்கப்படுகின்ற குப்பைகள் என்னுடைய ஊரான தடங்கம் கிராமத்தின் அருகில் கொட்டப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டு, அப்போது நான் ஒன்றியக் குழுத் தலைவராக இருந்தபோது, அன்றைக்கு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில், ஊர் பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி, தடங்கம் கிராமத்தின் பக்கத்தில் இருக்கின்ற புறம்போக்கு நிலம் குப்பைக் கிடங்காக மாற்றப்பட்டது. மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் எனப் பிரித்து, பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய ஒரு தொழிற்சாலை வரவிருக்கின்றது என்று கூறிய காரணத்தினால், அன்றைக்கு பொதுமக்கள் அதற்கு அனுமதித்தார்கள். ஆனால், இன்று வரையில் அந்த உரம் தயாரிக்கும் பணி தொடங்கப்படவில்லை. வாரத்தில் இரண்டு நாட்கள் அந்தக் குப்பைக் கிடங்கில் தீப்பிடித்து, புகை மண்டலமாக மாறக்கூடிய ஒரு சூழ்நிலைதான் இருக்கின்றது. இன்றைக்கு தருமபுரியில் இருக்கின்ற அனைத்து நீதிமன்றங்களும் அந்தப் பகுதியின் அருகிலேயே அமைந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதேபோன்று, சிப்காட்டும் அதன் பக்கத்தில்தான் இருக்கின்றது. ஆகவே, விரைவிலே,*

2018 ஜூலை 3]

அந்தக் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என்று பிரித்து, உரம் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்வியாகும். மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று கண்டிப்பாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று அனைத்துப் பகுதிகளிலுள்ள பொது மக்களுக்கும் வலியுறுத்தப்பட்டு, அவற்றைப் பிரித்து சேகரிக்க நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் அதுபோன்ற சூழ்நிலை இருக்கிறது. வேலூர் மாநகராட்சி போன்ற மாநகராட்சிகளில் மிகப் பெரிய இடப் பிரச்சினை வந்தபோது, இந்தத் திட்டத்தை வேகப்படுத்தி, செயல்படுத்த எல்லோரும் முன்வந்தனர். ஆதலால், அதுபோன்ற இடங்களில் இத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், கூடிய விரைவில், இத்திட்டத்தை துறை ரீதியாக ஆய்வு செய்து, வேகமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 254, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

254—

கலைக் கல்லூரி

***1823—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டையில் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?